1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 1974-ல் இப்படி ஒரு கருத்துரு இருந்தது. ஆனால் சாலை வசதிகள் அந்த வட்டாரத்தில் செய்துள்ளதன் விளைவாக அந்தக் கருத்துருவின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். ஊராட்சித் தேர்தலுக்குப் பிறகு பொது மக்கள் கருத்தையறிந்து முடிவு செய்யப்படும்.

திரு. துரை முத்துசாமி: பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியத் தேர்தல் சமீபத்தில் வர இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பெரிய பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பிரிக்கவேண்டுமென்று கேட்கும்போது மாவட்ட ஆட்சித்தலைவர் ஒருபதில் கூறுகிறார். டி.ஆர்.டி. யிடமிருந்து ஒரு பதில் வருகிறது. அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்லுகிறார்கள். பெரிய பஞ்சாயத்து யூனியன்கள் பிரிக்கப்படுவதற்குக் காலவரையறை ஏதும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, முடிவு செய்வது மாவட்ட ஆட்சித் தலைவரல்ல. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரும் அல்ல. அரசாங்கம் தான். அரசாங்கம் சிலவற்றை இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

*வினா எண் 812 : திரு டி.ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டிவனம் தொகுதியில் உள்ள ஒலக்கூர், மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு 3 கிலோ மீட்டர் முதல் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஊராட்சிகள் 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் இணைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவைகளைப் பிரித்தமைக்கு உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. டி.ஆர். இராஜாராம் ரெட்டி: இந்த மயிலம் ஊராட்சி ஒன்றியத்தில் 3 கிலோ மீட்டர் முதல் 8 கிலோமீட்டர் தூரம் வரையில் உள்ள கிராமங்கள் கிட்டத்தட்ட 60 கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. அதைப் பிரித்தால் அங்கே உள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே அவசியமாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது உண்மைதான். ஆனால் 1—3—1978-லிருந்து ஊராட்சி ஒன்றிய நிர்வாக முறையில் மாற்றம் செய்வதற்கு அரசு தடை விதித்திருக்கிறது. ஆகவே, தேர்தலுக்குப் பிறகு அதைப்பற்றி முடிவு செய்யலாம்.

திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி: தேர்தல் எப்போது வரும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. எத்தனை வருஷம் தள்ளும்? இது ரொம்ப முக்கியமானது. சுமார் 10, 20 ஆயிரம் மக்களுக்கு இது அவசியமாகும். இதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானம் கொடுத்து ஒரு வருஷத்திற்கு மேல் ஆகிவிட்டது. தேர்தல் வருவதற்கு ஒரு வருஷத்திற்கு மேல் ஆகலாம் என்று நினைக்கிறேன். ஆகவே, அதற்கு முன்னாடியே இதை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தேர்தல் பற்றி ஏற்கெனவே நாம் பேசியிருக்கிறோம்.

வினா எண் 813 —திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து மத்தூர் ஊராட்சி ஒன்றியம் உண்டாக்கத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஊத்தங்கரை யூனியன் 58 பஞ்சாயத்துக்கள் கொண்டதாக இருக்கிறது. தர்மபுரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கவேண்டுமென்ற விவரமான அறிக்கை அறிவிக்கப்பட்டது, அமைச்சர் அவர்கள் ஊத்தங்கரை ஒன்றியத்தை விரித்து அதனை மத்தூர் ஊராட்சி ஒன்றியமாக ஆக்க ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரசு ஆலோசிக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே 4 பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே முடிவு செய்து அது டி. ஆர். டி-க்கும் செக்ரடேரியேட்டுக்கும் அனுப்பப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?